REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: தை 18உ திங்கள் (31—1—55) ★ ★ வெளியூர்: தை 19உ செவ்வாய் (1—2—55) [இதழ் 196

32,000 சுரங்கத் தொழிலாளர் பழிவாங்கப்படுகின்றனர்!

வட ரொடீஷியாவில் சுரங்க வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் 32,000 ஆப்பிரிக்க சுரங்கத் தொழிலாளர்கள் அத்தனை பேரும் வேலையிலிருந்து நீக்கப்பட்டுவிட்டதாகச் செய்தி வந்துள்ளது.

"உடனே வேலைக்குத் திரும்ப வேண்டும்; இல்லாவிட்டால், வேலையிலிருந்து நீக்கப்படுவீர்" என்ற சுரங்க அதிகாரிகளின் இறுதி எச்சரிக்கையையும் தொழிலாளர்கள் பொருட்படுத்தாது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தமையால் 32,000 தொழிலாளர்களும் வேலையிலிருந்து நீக்கப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளதாம்.

அமெரிக்கா மீது சீனு அணுகுண்டு வீசும்?

—(:)—

பார்மோசா மூன்றும் உலகப் போரின் தளமாகிறது?

இடதுசாரி கட்சிகளின் முன்னணி!

பம்பாயில் புதிய கட்சி

பம்பாய், ஜன. 30—

பம்பாய் மாநிலத்திலுள்ள 6 இடதுசாரி கட்சிகள் — கம்யூனிஸ்டு, பி. சோ நீங்கலாக—ஒன்று கூடி, புதியதொரு அரசியல் கட்சியை உருவாக்கி, அதற்கு 'இந்திய மஜ்தூர் கிசான் கட்சி' என்று அதிகாரபூர்வமாகப் பெயரும் இட்டுள்ளனர்.

அக்கட்சிகளின் இணைப்பை நடத்திவைக்க தற்காலிகமாக ஒரு குழுவும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

புதிய அரசியல் கட்சியாக உருவாகியுள்ள கட்சியில் குடியானவர், உழைப்பாளிகள் கட்சி, புரட்சி சோஷலிஸ்டு கட்சி, மஜ்தூர் கம்யூனிஸ்டு கட்சி, முன்னணி கம்யூனிஸ்டு கட்சி, சோஷலிஸ்டு கட்சி ஆகியவை அங்கம் வகிக்கின்றன.

கென்யாவில் நிறத் திமிர்!

வெள்ளையர் மிரட்டல்!

கென்யாவிலுள்ள நன்யுகியில் 12,233 சதுர மைல் பரப்பளவுள்ள வெள்ளையருக்குச் சொந்தமான இடங்களில் மற்றவர்களை (கருப்பரை) குடியேற்றுவதற்கான முயற்சிகள் நடைபெறுமானால், அதை எதிர்த்துத் தாங்கள் போராடத் தயாராக இருப்பதாக அங்குள்ள 300 வெள்ளை நிலப் பிரபுக்கள் பிரிட்டிஷ் சர்க்காரையும், கென்யா சர்க்காரையும் எச்சரித்துள்ளனராம்.

'இது விஷயத்தில் கென்யா சர்க்கார் தலையிடுமானால், அதை எதிர்த்துப் போராட நாங்கள் தயங்கப் போவதில்லை' என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனராம்.

தேபர் மாநிலத்தில் தேயிலைக்கு ஆபத்து

பம்பாய், ஜன. 31—

சௌராஷ்டிர மாநில சர்க்கார் 60 கிராமங்களில் டீ கடைகளை மூடுமாறு உத்தரவிட்டுள்ளதாம். 40,00,000 மக்கள் உள்ள அந்த மாநிலத்தில், மாதந்தோறும் 8,00,000 பவுண்டு தேயிலை செலவாகிறதாம்.

கிராம பஞ்சாயத்துக்கள் டீ கடைகளை மூடவேண்டுமென்று தீர்மானித்தனவாம்.

இக்கடைகள் பல, சோம்பேறி மடமாகி, பல தகராறுகள் நிலவுவதற்குக் காரணமாக இருக்கின்றனவாம்.

சர்க்கார் தேயிலைக்கு எதிராக நடத்தும் போரை நிறுத்த இந்திய தேயிலை போர்டு தன்னால் இயன்றதைச் செய்ய முனைந்துள்ளதாம்!

இருதரப்பினரும் தாக்குதலுக்கு ஆயத்தமாகின்றனர்!

கீழ்க்கோடியில் கொந்தளிப்பு முற்றுகிறது!

லண்டன், ஜன. 31—

இங்கு வெளியிடப்பட்டிருக்கும் பூரண அதிகாரம் பெருத சீன அதிகாரிகளின் அறிக்கைகளில், "நெருக்கடி ஏற்படும்போது சீனு சோவியத்தின் உதவியை நாடும்," என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

"சீனு மீது அணுகுண்டு வீசப்பட்டால், [illegible] வீசப்படும் அணுகுண்டு ஒவ்வொன்றுக்கும், அமெரிக்கர் பதில் அணுகுண்டைப் பெறுவார்கள்" என்று நாங்காயிலிருந்து கிடைத்த செய்திகள் கூறுகின்றனவாம்; சீனுவுக்கும் நேச நாடுகள் உண்டு என்றும், அந்த நேச நாடுகளிடம் அணுகுண்டுகள் இருக்கின்றன என்றும் குறிப்பிடப்படுகிறதாம்.

சீனக் கரையோரக் கடல் பிரதேசத்தில் சில நாட்களாக நிலவி வரும் குழப்ப நிலைமையில் இப்போது தெளிவு ஏற்பட்டு வருகிறதாம். இரு தரப்பினரும் போதுமான யுத்த ஆயத்தங்களில் ஈடுபட்டிருக்கின்றனர் என்று சொல்லப்படுகிறது.

300 மைல் தூரம் பரவிக் கிடக்கும் தேசீயத் தீவுகளை இப்போது அமெரிக்கப் படைகள் பாதுகாத்து வருகின்றனவாம்.

டாச்சென் தீவை கம்யூனிஸ்டு கப்பல் படையினர் தீவிரமாக கண்காணிக்கிறார்களாம். இப்பகுதியில் ரஷ்ய சப்மரீன்கள் காணப்படுகின்றனவாம்.

★

அமெரிக்கா தாக்குமாம்!

பசிபிக்கில் உள்ள அமெரிக்கக் கப்பற்படையின் தளபதி அட்மிரல் பிளாக்ஸ் ஸ்டம்ப் பேசுகையில், "பார்மோசா மீது கம்யூனிஸ்டுகள் தாக்குதல் நடத்தினால், அமெரிக்கப் படைகள் திருப்பித் தாக்கும்" என்று கூறினார்.

"யாரேனும் எங்களை எந்த இடத்திலும், எப்போது தாக்கினாலும் நாங்கள் எங்களைப் பாதுகாத்துக் கொள்வோம்" என்று அவர் பத்திரிகை நிருபர்களிடம் குறிப்பிட்டாராம்.

டாச்சென் தீவுகள் பற்றி ஐசன்ஹோவர் தீட்டியுள்ள திட்டத்தை அமெரிக்கத் தூதுவர் கார்ல் ரான்கின், சியாங்-கே-ஷேக்கிடம் கொடுத்தாராம். அதன் பின்னர், அட்மிரல் பிலிக், சியாங்கை சந்தித்தாராம். ஐசன்ஹோவரின் திட்டத்தை சியாங், அப்படியே ஒப்புக்கொண்டாராம்.

★

விமானத் தாக்குதல்.

டாச்சன் தீவின் கீழ்ப்பகுதிகளை கம்யூனிஸ்டு ஜெட் விமானங்கள் தாக்கின என்று தெரிகிறது. கம்யூனிஸ்டு சீனர்கள் வசம் சென்ற வாரம் சிக்கிவிட்ட சிக்கியாங்ஷான் தீவை தேசீயச் சீன விமானங்கள் தாக்கினவாம்.

★

சிறைபட்ட விமானிகள்

இதற்கிடையில், சீனுவில் சிறை வைக்கப்பட்டிருக்கும் அமெரிக்க விமானிகளைப் பற்றிய செய்தியும் வெளியாகியிருக்கிறது. அமெரிக்காவில் உள்ள அவர்கள் உறவினர்கள் சீனுவிற்குச் சென்று கைதிகளைப் பார்க்கத் தேவையில்லை என்று ஐசன்ஹோவர் நிர்வாகம் கூறியதை ஏகமனதாக ஒப்புக்கொண்டுவிட்டார்களாம்.

★

நேரு — ஈடன் சந்திப்பு

உலகப் பிரச்சினைகளில் அதிகமாகத் தலையிட்டு வரும் பண்டித நேருவுடன் பார்மோசா பிரச்சினை பற்றி பிரிட்டிஷ் அமைச்சர் அந்தோனி ஈடன் கலந்து பேசினார் என்று தெரிகிறது.

பீகிங் தலைவர்களிடம் நேரடியாக கலந்து பேசும் தகுதி காமன்வெல்த் பிரதமர்களில் நேரு ஒருவருக்கே இருக்கிறது என்பதால், ஈடன் அவருடன் கலந்து பேசி, கிழக்கில் ஏற்பட்டிருக்கிற நெருக்கடியைக் குறைக்க முயல்கிறார் என்றுசொல்லப்படுகிறது.

பார்மோசா சண்டையை நிறுத்த பிரிட்டன் விரும்புகிறதாம்.

இப்பிரச்சினை பற்றி ஐ. நா. பாதுகாப்பு சபையின் விவாதத்தில் கலந்துகொள்ளுமாறு கம்யூனிஸ்டு சீனு அழைக்கப்படுமாம்.

★

ரஷ்யா குற்றச்சாட்டு

சீனுமீது அமெரிக்கா நடத்தும் ஆக்கிரமிப்பை ஐ. நா. பாதுகாப்பு சபை உடனே ஆராய வேண்டுமென்று ரஷ்யா அவசரத் தீர்மானம் ஒன்றைக் கொடுத்திருக்கிறதாம்.

சீனக் கரையோரத்தில் போர் நிறுத்தம் ஏற்பட வேண்டுமென்ற தீர்மானம் ஒன்றை நியூசிலாந்து கொண்டுவந்திருக்கிறது. இத்தீர்மானத்தை பிரிட்டனும், அமெரிக்காவும் ஆதரிக்கின்றன. இத்தீர்மானம் இன்று விவாதிக்கப்பட இருக்கிறது. அச்சமயம் ரஷ்யாவின் அவசரத் தீர்மானமும் விவாதிக்கப்படும். எந்த தீர்மானத்திற்கு முதல் இடம் கொடுப்பது என்பது பற்றி பலத்த விவாதம் இருக்குமென்று தெரிகிறது.

பாதுகாப்பு சபை, சீனுவை போர் நிறுத்த விவாதத்தில் கலந்துகொள்ளுமாறு அழைக்குமென்று மேற்கத்திய வல்லரசுகள் எதிர்பார்க்கின்றன.

இந்த முயற்சியைத் தாமதப்படுத்தவே ரஷ்யா அவசரத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறது என்று கூறப்படுகிறது.

சீனுவில் உள்ள பிரச்சினைகளில் அமெரிக்கா தலையிடுகிறது என்றும், அதன் மூலம் தூரக்கிழக்கில் நெருக்கடி ஏற்பட்டு போர்ப்பயம் ஏற்பட்டிருக்கிறது என்றும், பாதுகாப்பு சபை உடனே தலையிட்டு இந்தக் கொடுமையைத் தடுக்க வேண்டுமென்றும்ரஷ்யாவின் அவசரத் தீர்மானம் கூறுகிறதாம்.

பீகிங்கில் இருக்கும் பிரிட்டிஷ் தூதுவர், பிரதமர் சூ-யென்-லாயைச் சந்தித்து, பார்மோசா பிரச்சினை ஐ. நா. பாதுகாப்புக் குழு விவாதத்திற்கு கொண்டுவரப்பட இருப்பது பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். அது பற்றி தமது கருத்தைத் தெரிவிக்கையில், "சியாங்-கே-ஷேக்கிடம் இருந்து வரும் பார்மோசா, மற்றும் தீவுகள் மீது சீனு கோரும் உரிமை, சீனுவின் உள்நாட்டு விஷயமாகும். இவ்விஷயத்தில் ஐ. நா. சபை தலையிடுவது தவருகும்" என்று பதிலளித்திருக்கிறார்.

தெளிவே இல்லையே!

"'சோஷலிச சமுதாய அமைப்பு' முறை விஷயத்தில் காங்கிரசின் பிரகடனம் தெளிவாக இல்லை. இறுதியில் இந்த அமைப்பு, ஒரு சிலருக்கு மட்டும் பயனை அளிப்பதாக இருந்தால், அது, உண்மையிலேயே ஒரு 'சோஷலிச' ரீதியான அமைப்பாக இருக்க முடியாது. ஆங்கில மொழி ஒரு விநோதமான மொழியாகும்; 'சோஷலிச பாணி (பாட்டர்ன்) அமைப்பு' என்பதற்கு ஆங்கிலத்தில் உண்மையிலேயே என்ன பொருள் என்பதே தெரியவில்லை. ஒருவேளை, இது எதையுமே குறிப்பிடாத ஒன்ருக இருந்தாலும் இருக்கலாம்!"

இவ்வாறு, டாக்டர் ஜே. சி. குமரப்பா, மதுரை அமெரிக்கன் கல்லூரி மாணவர் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஈரான் ஷாவின் குமாரி

ஆகாகானின் மருமகளாவார்?

ஆகாகானின் புதல்வரான இளவரசன் சாட்ரெட்டின் என்பவருக்கு ஈரான் நாட்டு ஷாவின் மகளான ஷாஹ்னஸ் என்ற 16 வயது இளவரசியை மணம் முடித்து வைப்பது பற்றி, ஆகாகான் யோசிக்கிறாராம்.

மத்திய பிரதேசத்தில் எஃகு ஆலை

ரூ. 44 கோடி இயந்திர சாதனங்களை ரஷ்யா கடனாகத் தருமாம்

மத்திய பிரதேசத்தில் புதியதொரு எஃகுத் தொழிற்சாலை அமைப்பதுபற்றி, இந்தியா—ரஷ்யாவுக்கிடையே பிப்ரவரி முதல் தேதியன்று ஒரு ஒப்பந்தம் கையெழுத்திடப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாகச் செய்திகள் தெரிவித்துள்ளன.

இந்த ஒப்பந்தம் இந்தி, ரஷ்ய மொழிகளிலும், ஆங்கிலத்திலும் கையெழுத்திடப்படுமாம்.

செய்திகள் அறிவிக்கின்றபடி, இத்தொழிற்சாலை, ம. பி-யிலுள்ள பில்ஹாய் எனும் இடத்தில் நிறுவப்படும் என்றும், ரஷ்யாவிலிருந்து இயந்திர சாதனங்களுக்கென ரூ. 44 கோடி வரவழைக்கப்படுமென்றும், போக்குவரத்து வசதிக்கும், நகர நிர்மாணத்திற்கும் இந்திய சர்க்கார் ரூ. 100 கோடி வரை செலவிடலாம் என்றும் தெரிய வருகிறது.

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் எஃகுப் பொருட்கள் பற்றிய விவரங்களெல்லாம் இவ்வொப்பந்தத்தில் சேர்த்துக் கொள்ளப்பட இருக்கின்றனவாம். இத்திட்டம் தயாரிக்க, இந்திய சர்க்கார், முதல் முதலாக ரூ. 2½ கோடி கட்டணம் செலுத்துமென்றும், இதைத் தயாரிக்க 9 மாத காலம் ஆகுமென்றும் தெரிகிறது.

மேலும், ரஷ்யாவில் இதற்கான கருவி சாதனங்கள் தயாரிக்கப்படும்போது, இந்திய நிபுணர்கள் அவற்றை எந்தச் சமயத்திலும் பார்வையிடவும் அனுமதிக்கப்படுவர்.

இது, ரஷ்யா மற்றெந்த நாடுகளுடனும் செய்துள்ள ஒப்பந்தங்களில் இல்லாத சிறந்த ஒரு அம்சம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அது மட்டுமல்லாமல், விவரமான திட்ட அறிக்கை ஏற்கப்பட முடியாததாக இருக்குமானால், அதை நிராகரிக்கவும் இந்திய சர்க்காருக்கு இவ்வுடன்படிக்கை மூலம் அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

இந்தத் தொழிற்சாலை 1958—59-ம் ஆண்டில், எஃகு உற்பத்தித் தொழிலை ஆரம்பிக்குமெனவும் நம்பப்படுகிறது.

★

அதுவும் அங்கேதானு?

மற்றுமொரு எஃகுத் தொழிற்சாலையை நிறுவ, பிரிட்டிஷ் கம்பெனிகளைச் சேர்ந்த நிபுணர்கள் குழு ஒன்று வருகிற மார்ச்சு திங்களில் இந்தியா வந்து, தொழிற்சாலை நிறுவுவது பற்றிய ஆராய்ச்சிகளை நடத்துமென்றும், இத்தொழிற்சாலை, பீகாரிலோ, அல்லது மேற்கு வங்கத்திலோ நிறுவப்படும் என்றும் கூறப்படுகிறது.

நம் நாடு
தி.மு.க.தினஇதழ் ஆசிரியர்..அண்ணாதுரை

சென்னை 31—1—1955 திங்கள்

ஜமீன் மாளிகை!

நடைபாதையில் குடித்தனம் நடத்தும் நாதியற்றவர்கள்—சென்னை போன்ற நகரங்களில் ஏராளம் உண்டு.

ஒரே வீட்டில் பதினைந்து அல்லது இருபது குடும்பங்கள் வாழ்கின்றன—அங்கே குடியிருக்கும் இளம் தம்பதிகள் உல்லாசமாக வாழ முடியாத நிலை; உரத்துப் பேச இயலாத நிலை; நோயாளிகள், தங்கள் வேதனையை வெளிப்படுத்த முடியாத நிலை—இவைகள், நாட்டிலே காணப்படும் சாதாரண நிகழ்ச்சிகள்!

இரண்டு பேர்தான் குடியிருப்பார்கள்—ஆனால், ஒரு பங்களா அவர்களுக்கென உண்டு—நாட்டிலே இது போன்ற பங்களாக்கள் பல உண்டு!

மகாராஜாக்கள், மன்னர்கள் எனப்படுபவர்களுக்கு - மதிப்பு எவ்வளவு என்பது தெளிவாகத் தெரியாது—ஆயிரம் பேர் குடியிருக்கக்கூடிய மாளிகைகள் பல உண்டு.

ஜமீன்தார்கள் பலர் இருந்தார்கள்—இப்போது மாற்றுப் பெயரில் இருக்கிறார்கள்-அவர்கள் குடும்பத்தில் பத்து உறுப்பினர்கள்தான் இருப்பார்கள்; ஆனால், அவர்கள் குடியிருப்பதற்கு பல மாளிகைகள் உண்டு.

சென்னைக்கு வந்தால் தங்குவதற்கு அடையாற்றிலே ஒரு மாளிகை; நீலகிரிக்குச் சென்றால் மகிழ்ச்சியுடன் வாழ ஒரு 'நிவாசம்'; பண்ணையாட்களைப் பார்க்கச் சென்றால், சோலை நடுவே ஒரு பங்களா—இப்படி பல மாளிகைகள் உண்டு, நிலப்பிரபுக்களுக்கு!

மன்னர்கள் — மகாராஜாக்கள் என்போர் பலருக்கு எத்தனை மாளிகை என்று அறுதியிட்டுச் சொல்ல முடியாது. தனக்கும், தனது அபிமானத்திற்குப் பாத்திரமானவர்களுக்கும் என மாளிகைகளை வைத்துள்ள முன்னாள் மன்னர்கள் இப்போதும் இருக்கின்றனர். —அவர்கள் தொகை ஏராளம்!

அகில உலகப் பிரச்சினைகளில் அதிக கவனம் செலுத்தி வரும் பண்டித நேருவுக்கு இப்போது மாளிகைகள் மீது கண்ணோட்டம் சென்றிருக்கிறது.

மண் குடிசையில் வாழுபவர்களைக் கவனிக்க அவருக்கும் அவரால் இயங்கும் காங்கிரசுக்கும் இயலவில்லை.

நடைபாதையில் ஓட்டைக் குடிசையில், ஓட்டுக் குடித்தனத்தில் வாழ்வோர் அப்படியே இருக்கிறார்கள்; ஆனால், பண்டித நேருவின் கவனம், இப்போது, முன்னாள் மன்னர்கள்—ஜமீன்தார்கள்—நிலப் பிரபுக்கள் ஆகியவர்களின் மாளிகைகள் மீது திரும்பியிருக்கிறது.

அந்த மாளிகைகள் இப்போது மங்கிப்போய் கிடக்கின்றனவாம்; நாட்டிலே சமூக நிலைமை மாறிவிட்டதால், அந்தப் 'பெரிய மனிதர்'களால் மாளிகைகளைப் பாதுகாக்க இயலவில்லையாம்; காவலின்றி, கவர்ச்சியின்றி, 'அனாதை'கள் போல் அவைகள் காட்சியளிக்கின்றனவாம்.

ஒரு காலத்தில் அதே மாளிகைகள் ஜெகஜோதியாகக் காட்சியளித்தன; பல மாளிகைகளின் கூடங்களிலே மின் ஒளியும், பண் ஒலியும், பாவையரின் சதங்கை ஒலியும் ஓயாது கேட்டுக்கொண்டிருந்தன. இப்போது, அக்கூடங்களிலே வௌவால்கள் வாசம் செய்கின்றனவாம்!

இன்றுகூட அதே நிலைமை இருக்கவேண்டும் என்றுதான் 'அவர்களில்' பலர் விரும்புவார்கள்.

'நிலைமை மாறிவிட்டது'—பண்டித நேரு, சென்னை முதல் அமைச்சருக்கு இப்படி கடிதம் எழுதியிருக்கிறார் என்று செய்திகள் கூறுகின்றன.

மாளிகைகள் காலியாகக் கிடக்கின்றன என்பது உண்மையாக இருக்கலாம்; ஆனால், அவற்றில் வாழ்ந்தோரின் மனம் மாறிவிட்டது என்பது, முழு உண்மையாக இருக்க முடியாது.

ஜமீன் வருமானத்திலும், தர்பார் பரிசுகளிலும், மக்கள் வரிப் பணத்திலும் வாழ்வு நடத்திய பல 'கனம்'கள், இன்று, லட்சக் கணக்கிலும், கோடிக்கணக்கிலும் சர்க்கார் தருகிற நஷ்டஈடு மானியத் தொகைகளைக் கொண்டு வெளிநாடுகளில் 'இன்பம்' தேடி அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்தியாவில் பல மாளிகைகள் காலியாகக் கிடக்கின்றன; ஆனால், அம்மாளிகைகளில் வசித்த பலருக்கு பாரிசில் மாளிகைகள் இருக்கின்றன—இதுதான், 'சமூக நிலை மாறிவிட்டது,' என்று, பண்டித நேரு கூறும் கருத்துரையில் புதைந்து கிடக்கும் பொருள் எனக் கொள்ளலாம்.

"காலியாகக் கிடக்கும் அரண்மனைகளை சர்க்கார் எடுத்துக் கொண்டு, அவைகளில் அலுவலகங்கள், மருத்துவமனைகள், பள்ளிக்கூடங்கள், கலாசாலைகள் ஆகியவைகளை அமைக்கலாம"—என்று, பண்டிதர் யோசனை கூறியிருக்கிறாரெனத் தெரிகிறது.

"குழலோசை கேட்ட கூடம், குழந்தைகளுக்கான விடுதியாக மாற்றப்படலாம்; 'ஜமீன் வருமானத்தை அதிகரிப்பது எப்படி?'—என்று திட்டமிடப்பட்ட பங்களாக்கள், ஜனநாயகம் என்பதுபற்றி உரையாற்றும் கலாசாலைகளாக மாற்றப்படலாம்," என்பது, பண்டிதரின் கருத்து—பாராட்டப்பட வேண்டியதுதான்; ஆனால், சர்க்கார் அலுவலகங்களுக்கு இடம் தேடும் முயற்சியைக் குறைப்பதற்கும், இது பயன்படும் என்றும் கொள்ளலாமல்லவா?

'கனம்'களின் கட்டிடங்களை சர்க்கார் எடுத்துக்கொள்வதில் 'கட்டாயம்' கூடாது—என்று பண்டிதர் கூறுகிறார். 'சோஷலிச சமுதாயம்' அமைக்க வழி செய்வதாகச் சொல்லப்படும் இந்திய அரசியல் சட்டம், சொத்துரிமைக்கு எல்லை நிர்ணயிக்கவில்லை; ஆகவே, 'கட்டாய'மாக சர்க்கார் அந்த மாளிகைகளை எடுத்துக் கொள்வது இயலாது.

ஆகவே, சிறு தொகைகளுக்கு அவற்றை வாங்கலாம்; அல்லது, பல தவணைகளில் அந்த மாளிகைகளுக்கான பணத்தைக் கொடுக்கலாம்—என்று பண்டித நேரு எழுதிய கடிதம் கூறுகிறதாம்.

காங்கிரஸ் அரசு, ஏராளமான நஷ்டஈடு கொடுத்து ஜமீன்களை ஒழித்துவிட்டது; மன்னர்களுக்குக் கோடி கோடியாக மானியம் தர ஒப்புக்கொண்டு, அவர்களின் முடியை அகற்றிவிட்டது; இப்போது, அந்தக் 'கனம்'களால் நிர்வகிக்க இயலாத மாளிகைகளை, காங்கிரஸ் சர்க்கார் பணம் கொடுத்து வாங்கப் போகிறதா—என்ற எண்ணம், பொது மக்கள் மனதிலே தோன்றலாம்.

பண்டித நேரு கூறும் மாளிகைகளில், எத்தனை மாளிகைகள் சர்க்காரின் தேவைக்கு ஏற்றவை என்பதை சரிவர சர்க்கார் அறிய வேண்டும்: புதிய கட்டிடங்கள் கட்டுவதால் ஏற்படும் நன்மைகளைவிட ஜமீன் மாளிகைகளை வாங்குவதால் சர்க்காருக்கு என்ன லாபம் என்பதையும் சர்க்கார் கணக்கிட வேண்டும்.

சர்க்கார் அலுவலகத்தையோ, அல்லது பள்ளிக்கூடத்தையோ, அல்லது மருத்துவமனையையோ அந்த மாளிகைகளில் அமைத்தால், அந்தப் புதிய இடங்கள், பொதுமக்கள் வாழும் பகுதிகளுக்கு அருகே இருக்கின்றனவா என்பதையும் சர்க்கார் கவனிக்க வேண்டும்.

தீர ஆலோசிக்கப்பட்ட பின்னரே, பண்டிதரின் கருத்து பற்றி, சர்க்கார் ஒரு முடிவிற்கு வர வேண்டும்.

நாட்டை ஆளும் காங்கிரஸ், 'கனம்'களின் நண்பன் என்பது அனைவரும் அறிந்த உண்மை. அமைச்சர்கள், 'கனம்'களின் பணத் தேவையைப் பூர்த்தி செய்ய—அவர்கள் கட்டிடங்களை சர்க்கார் எடுத்துக் கொள்வது என்ற முடிவு—ஒரு வாய்ப்பாக அமைந்துவிடக் கூடாது.

'கொடை உள்ளம்' கொண்டவர்கள், தங்கள் மாளிகைகளை சர்க்காருக்கு நன்கொடையாகத் தந்துவிட்டால் பாராட்டப்பட வேண்டியதுதான்!

பண்டிதர் கூறுகிறார் என்பதற்காக, சர்க்கார், இந்த 'மாஜி'களின் மாளிகைகளை வாங்கி, அதன் மூலம் நாட்டு மக்களின் வரிப் பணத்தைப் பாழாக்கும் நிலைமை ஏற்படுத்துவது கூடாது என்று சர்க்காருக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

போதிய எச்சரிக்கையுடன் சர்க்கார் இப்பிரச்சினையில் காரியமாற்ற வேண்டும்; இல்லையேல், ஜமீன் மாளிகை, ஏழைகளின் பணத்தை விழுங்கி விட நேரிடலாம்.

உரத்தொழிற்சாலையை இங்கே அமையுங்கள்!

ம. பி. சர்க்கார் கேட்கிறது

நாகபுரி, ஜன. 28—

இந்திய சர்க்கார் அடுத்து அமைக்க இருக்கும் உரத் தொழிற்சாலையை மத்தியப் பிரதேசத்தில் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை ஒன்றை மத்திய பிரதேச சர்க்கார் இந்திய சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறது.

சீமான்களின் பாழடையும் மாளிகைகள்!

மக்களின் உபயோகத்திற்காக வாங்கப்படலாம்

திரு. காமராசருக்கு பண்டிதரின் யோசனை

சென்னை, ஜன. 28—

"பெரும் பெரும் ஜமீன்தார்களுக்கும், பிரபுக்களுக்கும் சொந்தமான பாழடைந்துவரும் கட்டிடங்களையும், மாளிகைகளையும் சர்க்கார் கைப்பற்றி, மருத்துவ மனைகள், பள்ளிக்கூடங்கள் போன்றவைகட்கு அவைகளை உபயோகப்படுத்திக்கொள்ளலாம்,"

என்று, பண்டித நேரு, சென்னை முதன் மந்திரிக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார் எனத் தெரிகிறது.

பிரதமர் நேரு தம் கடிதத்தில் குறிப்பிடுவதாவது:—

"கால மாற்றத்தால், பெரும் ஜமீன்களிடமும், பிரபுக்களிடமும் உள்ள மாளிகைகளை அவர்கள் காப்பாற்ற முடியாதவர்களாயிருப்பதால், அவை பாழடைந்து வருகின்றன.

சமூக மாறுதல் எங்கு ஏற்பட்டாலும், இம்மாதிரி பெரிய பிரபுக்கள் தங்களின் பெரும் மாளிகைகளை மாறுபட்ட காலத்தில் பராமரிக்க முடியாதவர்களாகி விடுகின்றனர்.

இன்று இங்கிலாந்தில், பிரபுக்களுக்கு, அவர்களின் 'எஸ்டேட்டுகள்' பெரும்பாரமாகவே தோன்றுகின்றன. பெரும் கட்டிடங்களை அவர்களால் கட்டிக்காத்து அவற்றின் பராமரிப்புக்குத் 'தீனி' போட முடியாதவர்களாகிவிட்டனர். அவற்றில் சில தேசிய 'டிரஸ்டி'யிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டன. இன்னும் பல, மருத்துவ மனைகளாக, பள்ளிக்கூடங்களாக மாறியுள்ளன.

அதே போலவே இந்தியாவிலும் பாழடைந்துவரும் பல கட்டிடங்கள் இருக்கின்றன. அவற்றை பல நல்ல காரியங்களுக்கு உபயோகிக்க முடியாதா?

தர்பங்கா மகாராஜாவின் குதிரை லாயங்களில் ஒன்று இப்போது ஒரு பெரிய சமஸ்கிருத ஆராய்ச்சிக் கழகமாக மாறியுள்ளதாக கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

ராஜாக்கள், பிரபுக்கள் ஆகியோருக்குச் சொந்தமான இதுபோன்ற கட்டிடங்களை சர்க்கார் தேடிப் பிடித்து உபயோகித்துக் கொள்ளலாம்.

மொத்தம் எத்தனை கட்டிடங்களிருக்கின்றன என்று தேடிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. குறிப்பிட்ட சில கட்டிடங்களின் மீது மட்டும் கவனம் செலுத்தினால் போதுமானது.

இவற்றை நாம் கட்டாயமாக அவர்களிடமிருந்து பறிமுதல் செய்ய வேண்டியதில்லை. பலர் அவற்றை தாமாகவே நன்கொடையாகத் தரலாம்; சிலர், ஒரு சிறு தொகைக்கு பெயரளவில் விற்பனை செய்யலாம்; இன்னும் சிலர் தவணைகளில் பணம் பெற்றுக் கொள்ளக்கூடும். இவற்றிற்கேற்ப சர்க்கார் நடந்துகொள்ளலாம்."

ஜப்பான் நெல் சாகுபடி முறை

சென்னை மாநிலத்தில் 10 லட்சம் ஏக்கரில் புகுத்தப்பட்டதாம்!

ஜப்பானிய நெல் சாகுபடி முறை இவ்வாண்டு சென்னை மாநிலத்தில் சுமார் 10 லட்சம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலத்தில் புகுத்தப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இம்முறையினால், குறைந்த அளவு விதைகள், பசுந்தாள் உரம், அம்மோனியம் சல்பேட் உபயோகித்தல் ஆகிய வசதிகள் முக்கியமானவையாகும். இம்முறை ஆங்காங்கேயுள்ள நிலத்தின் தன்மைக்கொப்ப மாற்றியமைக்கப்படுகிறதாம்.

சென்னை மாநிலத்தில், இம்முறையைப் பின்பற்றி மொத்தம் 44 லட்சம் டன் நெல் உற்பத்தி செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விஞ்ஞானம் வளருகிறது!

நியூயார்க், ஜன. 29—

கொலம்பியா பல்கலைக் கழகத்திலுள்ள பௌதீக நிபுணர்கள், அணுசக்தியின் உதவியால் இயங்கும் புதியதொரு கடிகாரத்தைக் கண்டு பிடித்திருக்கின்றனர். இந்த கடிகாரம் மற்றெந்த கடிகாரங்களைக் காட்டிலும் மிகச் சரியாகவும் தெளிவாகவும் காலத்தைக் குறிப்பிடும் என்று கூறப்படுகிறது.

இக்கடிகாரம் பற்றித் தமது கருத்தைத் தெரிவிக்கையில், மேற்படி ஆராய்ச்சிக் குழுத் தலைவர், "இக்கடிகாரம் 300 ஆண்டுகளாகத் தொடர்ந்து இயங்கிக்கொண்டே இருந்தால், காலத்தைக் காட்டுவதில் ஒரு விநாடி (செகண்டு) வித்தியாசமேற்படும் (!) என்று குறிப்பிட்டிருக்கிறார்.

கப்பல் போக்குவரத்து, 'ராடார்' கருவி மூலம் செய்தி அனுப்புதல் போன்றவற்றிற்கும், அணுசக்தி பற்றிஎழும் எல்லா ஆராய்ச்சிகளுக்கும் இந்தப் புதிய கடிகாரம் பெரிதும் பயன்படும் எனக் கூறப்படுகிறது.

சர்க்கார் விருந்தில் - முன்னாள் குற்றவாளி!

அலகாபாத், ஜன. 28—

குடியரசு நாளன்று மாவட்ட மாஜிஸ்திரேட் நடத்திய விருந்தில் அழகிய உடை தரித்து ஏராளமான விருந்தினர்கள் கலந்து கொண்டார்களாம்.

அவர்களிடையே முன்வரிசையில் கிழிந்த உடைகளுடன் சுமார் 95 வயதுடைய ஒருவர் இருந்தாராம்; அவர், 'காராஸ்' என்று அழைக்கப்படும் மலைவாழ் இனத்தைச் சேர்ந்தவராம்; அவர்கள் பழையகால குற்றவாளிகள் இனத்தவர்!

அவரிடம் ஒரு பத்திரிகை நிருபர் சென்று விசாரித்தபோது, "நான் கடந்த 30 ஆண்டுகாலமாக எந்தக் குற்றமும் செய்யவில்லை; என் இனத்தவர்களும் அப்படியே நடந்துகொள்வார்கள் என்று நம்புகிறேன்," என்று கூறினாராம்.

'காராஸ்' என்னும் இம்மக்கள்—1,500 பேர், 1949-ம் ஆண்டு வரையில், வேலியிடப்பட்ட ஒரு பகுதியில் வாழுமாறு செய்யப்பட்டார்களாம்; 'குற்றம் புரியாமல் வாழ்வது எப்படி?' என்று அவர்களுக்குப் போதிக்கப்பட்டதாம்; இந்த ஆண்டில் அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். அவர்கள் நல்வாழ்விற்கு போதிய முயற்சிகள் செய்யப்படுகிறதாம்.

குஷ்ட நோயாளிகளைக் குணப்படுத்த திட்டம்

மாநிலத்திலுள்ள குஷ்ட நோயாளிகளையெல்லாம் ஒன்று திரட்டி தனியாகவைத்து அவர்களைக் குணப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒரிசா மாநில சர்க்கார் திட்டம் ஒன்றைத் தயாரித்திருக்கிறதாம். இத்திட்டம் நிறைவேற ரூ. 16,000 செலவாகுமெனத் தெரிகிறது.

வாழ்ந்து வளம் பெற்றிருந்த நாம் தாழ்ந்து வறுமையுற்றிருப்பது ஏன்?

செத்த மொழிக்கு இடம் தந்தோம்—இன்று செத்து மடிகிறோம்!

தோழர் அன்பழகன் விளக்குகிறார்

"வாழ்ந்து வளம் பெற்றிருந்த நாம்—பழமைக்கு அடிபணிந்ததால், வந்ததையெல்லாம் தூய்மையானவை என்று எண்ணி ஏமாந்ததால், நம்மை நாமே இழிவு படுத்திக்கொண்டதால், 'நமது மொழி—நமது இனம்—நமது நாடு' என்ற பற்று இல்லாமல் போனதால், குறள் நெறியை மறந்த காரணத்தால்—செத்த மொழி ஒன்று நம் மீது செலுத்தப்பட்டு, நமது செல்வங்கள் செல்லரிக்கப்பட்டு விட்டது;

"பாருலகுக்கு நமது புகழைப் பரப்பிய புரட்சி ஏடுகளை எல்லாம் அந்த செத்த மொழி ஆறு, குளங்களிலே, ஆடிப் பெருக்கில் போடச் செய்தது; கண்டதையும் கேட்டதையும் கடவுளராக்கி, அதற்கென திட்டமும் வகுத்து பண்டிகை கொண்டாடியும், மற்றவருக்கும் கொடுக்காது தானும் உண்ணாது ஒரு சாராருக்கே கொடுத்துத்தான், இறுதியிலே நாம் இந்த நிலையை அடைந்துவிட்டிருக்கிறோம்.

"உள்ளபடியே, கல்தோன்றி மண்தோன்றா காலத்தே தோன்றிய முதற்குடி நாம்தான்; பிறருக்கு, பேசவும் வாழவும் கற்றுக்கொடுத்தது நாம்தான்; நமது தமிழ் மொழியின் வயிற்றிலிருந்து பிறந்தவைகள்தான் உலகப் பொதுமொழிகள் யாவும்;

"'வடமொழி செத்த மொழியல்ல; — ஏனெனில், அது வாழ்ந்திருந்தால் அல்லவோ செத்துவிட்டிருக்க முடியும்—அதுதான், வாழவே இல்லையே'—என்று பேசப்பட்டிருக்கிறது நாவலர் சோமசுந்தர பாரதி அவர்களால்; அப்படிப்பட்ட வழக்கொழிந்த மொழி நம்மிடையே திரிக்கப்பட்டு, நாம் பலவாறாக பிரிக்கப்பட்டு, சூழ்ச்சியால் வீழ்த்தப்பட்ட காலத்திலும், நமது பெருமையைக் காட்டி, குறள் நெறி கொடுத்து முறியடிக்கத்தான் செய்தோம்."

—இவ்வாறு, தோழர் க. அன்பழகன் அவர்கள் காரைக்குடி அழகப்பா கல்லூரியில், 21—1—55ல் நடைபெற்ற தமிழ்த் திருநாள் விழாவில் சொற்பொழிவாற்றுகையில் கூறினார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது:—

"இப்போது எது எதெல்லாமோ பண்டிகைகளாகிவிட்டன; மறைந்திருந்து கொலை செய்த கொலை பாதகன்—மாதரின் சேலையைத் திருடி மரத்திலே மறைந்திருந்தவன்-மனைவியின் உதவியால் மாற்றானைக் கொன்றவன்—மூஞ்சூர் வாகனத்தில் உள்ளவன்—காமக்கடலில் மூழ்கியவன்—பெண்ணைத் தேடித் தேடி அலைகின்றவன்—இவர்களெல்லாம் கடவுள்களாக்கப்பட்டு, அவர்களுக்கென பண்டிகைகளும் நடைபெறுகின்றன.

நாம் கொண்டாடும் பொங்கல் விழாவோ பொருள் பொதிந்தது—உழைப்பின் உயர்வையும், நன்றி காட்டும் நற்றமிழர் நற்பண்பையும் எடுத்துக் காட்டும் நல்லதோர் விழா; இம்மாதிரியான விழா—பொங்கல் விழா மற்றைய நாடுகளில் கொண்டாடப்படுவதில்லை. என்? அவர்கள் தமிழரல்லவே! தமிழ் இனம் அல்லவே! அதனால்தான்.

மேல் நாடுகளிலே மாடுகளையே பொங்கலிட்டு உண்பார்கள்; ஆனால், நாமோ மாட்டுக்குச் செய்ந்நன்றி தெரிவிக்கிறோம்; எனவேதான் கூறுகிறோம்— உழைப்பின் மேன்மையை, செய்ந்நன்றி தெரிவிக்கும் அந்த ஒப்பற்ற செயலை உலகுக்கே அறிவிக்கும் ஒப்பற்றதோர் திருவிழா.

அப்படிப்பட்ட ஒரு திருநாள்—ஒப்பற்ற நமது பண்பை உலகறியக் காட்டும் ஒரு பொன்னாள்கூட, இப்போது 'சங்கராந்தி' ஆகிவிட்டதென்றால் அதற்கான காரணங்களை நாம் சற்று எண்ணிப் பார்த்துத்தான் தீரவேண்டும். இந்த இழிநிலைக்குக் காரணம் யார்?—அதற்கான சூழ்நிலைகள் என்ன என்பதை உணர்ந்தறிய வேண்டும்."

கூட்டத்திற்கு தோழர் பாண்டியன் தலைமை தாங்கினார்.

* * *

தோழர் அன்பழகன் அவர்கள், மேற்படி கல்லூரி மாணவர் பேரவைக்கு 'திருக்குறள்' புத்தகம் ஒன்றை அன்பளிப்புத் தந்து, மாணவர்களனைவரும் குறள் நெறியைக் கடைபிடிக்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

* * *

21, 24—1—55 ஆகிய இரு நாட்களிலும் முறையே தோழர்கள் க. அன்பழகன், இரா. நெடுஞ்செழியனும் காரைக்குடிக்கு வருகை தந்திருந்தபோது, மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்த விஞ்ஞான, இரசாயன ஆராய்ச்சிக் கூடம், எஞ்சினியரிங் கல்லூரி ஆகியவைகளைப் பார்வையிட்டனர். தோழர்களை, ஆராய்ச்சிக்கூட அதிபர்கள் வரவேற்று உபசரித்தனர். (ந. நி)

டாக்டர் லோகியா தோற்றார்!

ரீவா, ஜன. 23—

'ஹாங்காங் தீவு இன்னும் ஐந்தாண்டுகளில் சீனாவுடன் சேர்ந்துவிடும்,' என்று 1950-ம் ஆண்டில், டாக்டர் ராம் மனோகர் லோகியா ஒரு சீன ஒட்டல்காரரிடம் பந்தயம் கட்டினாராம்!

பந்தயத் தொகை ரூ. 5,0000!

டின்-முன்ஷா என்னும் அந்த ஒட்டல்காரர், ஹாங்காங்கில் உள்ள தனது ஒட்டலை மூடிவிட்டு இப்போது அர்ஜெண்டைனாவில் இருக்கிறாராம்.

பந்தயத்தில் கூறப்பட்டபடி ஹாங்காங் தீவு சீனாவுடன் சேரவில்லையென்றும், ஆகவே, ரூ. 5000-மும் தனக்கு அனுப்பப்பட வேண்டுமென்றும் அவர் லோகியாவுக்கு கடிதம் எழுதியிருக்கிறாராம்.

ஒரே தடவையில் பணத்தைக் கொடுக்க முடியவில்லை என்றால் பல தவணைகளில் பணத்தைத் தரலாம் என்றும் அவர், அக்கடிதத்தில் எழுதியிருக்கிறாராம்!

பஸ்லுல் ஹக் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்?

கிழக்கு வங்க ஐக்கிய முன்னணியில் பிளவு!

கிழக்கு வங்கத்தில் உள்ள ஐக்கிய முன்னணியினரிடையே பிளவு தோன்றியிருப்பதாகச் செய்தி கிடைக்கிறது.

பிப். 17-ந் தேதியன்று டாக்காவில் ஐக்கிய முன்னணிக் கட்சிக் கூட்டம் நடைபெறும்போது தலைவரான பஸ்லுல் ஹக் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர எண்ணியிருப்பதாக முஜிபிர் ரஹ்மான் என்ற கட்சி உறுப்பினர்களில் முக்கியமானவர் குறிப்பிட்டிருக்கிறார்.

சட்ட சபைக் கட்சி உறுப்பினர்களில் 115 பேர்கள் எதிர்த்து வாக்களித்தால்தான் ஹக்கின் தலைமைப் பதவி பறிபோகும் என்றும் கூறப்படுகிறது.

நூதன வேலையல்ல - நுணுக்கப் பணி!

சூரத், ஜன. 28—

பம்பாய் மாநிலத்தில் இரண்டு போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்களுக்குத் தற்போது புதுமையானதொரு வேலை பணிக்கப்பட்டிருக்கிறது.

போலீசாரின் மனைவியர்களுக்கு ஊறுகாய் போடுவது—பழங்களைப் பக்குவம் செய்வது ஆகிய இவ்வேலைகளைக் கற்றுக்கொடுக்க வேண்டுமென்பதே இந்த நூதனமான வேலையாம்!

அண்மையில் நாகபுரிக்கு வருகை தந்த பம்பாய் மாநில தலைமை போலீஸ் அதிகாரி, நாகபுரி குடிசைக் கைத்தொழில் கழகமொன்றைப் பார்வையிடுகையில், அங்கு காய்கறிகளையும், பழங்களையும் பக்குவம் செய்யும் சிறு சிறு இயந்திரங்களைக் கண்டதும், போலீசாரின் மனைவியர் தமது ஒழிந்த நேரங்களில் பொருள் சம்பாதிக்க இவை உதவியாக இருக்குமென முடிவு செய்தார்.

பின்னர், அவர் சூரத், ரத்தினகிரி மாவட்டங்களிலிருந்து இரண்டு போலீஸ் அதிகாரிகளை வரவழைத்து, அவ்வியந்திரங்கள் வேலை செய்யும் முறையைக் கற்றுக்கொண்டு, ஒரு மாத கால பயிற்சிக்குப் பின்னர், அவர்கள், போலீசாரின் மனைவியருக்கு மேற்கண்ட வேலைகளைப் பற்றிய பயிற்சிகள் அளிக்கவேண்டுமென உத்தரவிட்டாராம்.

கடுமையாக உழைக்க தூண்டுதல் தேவை!

"மக்கள் மேற்கொள்ளும் கடுமையான உழைப்பைப் பொறுத்தே ஒரு நாட்டின் செழுமை இருக்கிறது; இதற்குச் சமமாக செல்வத்தைப் பெருக்க, மக்களைத் தூண்டுவதற்கான வசதிகளைச் செய்யவேண்டியதும் மிக மிக முக்கியமாகும். செல்வந்தர்களுக்குக் காட்டப்பெறும் மதிப்பைக் காட்டிலும் உழைப்பவர்களுக்கு அதிக மதிப்பையும் உயர்வையும் காட்ட முன்வர வேண்டும்,"

என, குடியரசு விழாவின்போது சென்னையில் பேசிய காமராசர் குறிப்பிட்டார்.

நீக்ரோவின் உடலைப் புதைக்க வெள்ளையர் அனுமதி மறுத்தனர்!

சான்பிரான்சிஸ்கோ, ஜன 28—

இறந்துபோன நீக்ரோ ஒருவரின் உடலைப் புதைக்க அனுமதிக்க முடியாது என்று கல்லறை அதிபர்கள் மறுத்துவிட்டார்களாம்.

"தனிப்பட்ட நபர்களுக்குச் சொந்தமான கல்லறைகள் இனபேதம் காட்டுவது, சட்டவிரோதமல்ல," என்று சான்பிரான்சிஸ்கோ நீதிமன்றம் தீர்ப்பளித்ததாம்.

தனது கணவரின் உடலைப் புதைக்க மறுத்துவிட்டார்கள் என்றும், அது சட்ட விரோதமானதென்றும், அதற்கு நஷ்டஈடாக 50,000 டாலர்கள் தர வேண்டுமெனவும் கோரி, திருமதி கிளாரா லாங் என்பவர் கொடுத்த மனுவை நீதிமன்றம் தள்ளிவிட்டதாம்.

இப்படித் தீர்ப்பளித்தபோதும், 'இதுபோன்று செய்வது தகாத செயல்,' என்று குறிப்பிட்டு, 'மரணத்தில் அனைவரும் சமம்' என்பதை அவர்கள் உணர்வார்கள் என்று குறிப்பிட்டாராம்.

திட்டக்குடியில் திராவிடர் திருநாள்

16-1-55ல், இவ்வூர் வானொலி திடலில் விழா கொண்டாடப்பட்டது. விழாவையொட்டி நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு, தோழர் கே. இராசரத்தினம் தலைமையில், தோழர் பொ. வைத்திநாதன் கைத்தறி ஆடைகள் பரிசளித்தார்.

கைப்பந்து, சடுகுடு, வளைவுபந்து நீளம் தாண்டுதல் போன்ற விளையாட்டுகளிலும், கட்டுரை, இசை, பேச்சுப் போட்டிகளும், ஓட்டம், சைக்கிள் விடுதல் ஆகிய போட்டிகளும் தி. மு. கழகம், தி. ம. மு. கழகம் சார்பில் நடைபெற்றன.

இவ்விழாவின் நினைவாக, இறந்தார் குடும்ப நிதிக்காக ரூ. 5 நன்கொடை அளிக்கப்பட்டது. வரப்பெற்றோம் - நன்றி - பொறுப்பாளர்.

நரசிங்கபுரம்:

18—1—55 மாலை 3 மணியளவில், இவ்வூர் பிள்ளையார் கோயில் முன்பு, திராவிடர் திருநாளும், தி. மு. கழக 3-ம் ஆண்டு நிறைவு விழாவும் நடைபெற்றது. விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. தோழர் என். கே. நல்லவாண்டு தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில், தோழர் என். கே. இராசு சொற்பொழிவாற்றினார். விளையாட்டுக்களில் வெற்றி பெற்றோருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டது. தோழர் என். ஏ. சின்னகண்ணு கழகக் கொடியேற்றினார். இரவு 9 மணிக்கு தோழர் மு. கருணாநிதி எழுதிய 'தூக்குமேடை' நாடகம் நடைபெற்றது.

கீனனூர்:

21—1—55ல், இவ்வூர் தி. மு. கழகச் சார்பில் தோழர் பொ. சொக்கலிங்கம் தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில் தோழர்கள் து. மாரிமுத்து, தி. ரத்தினசபாபதி, சி. முனுசாமி, தில்லை-வில்லாளன், செங்குட்டுவன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பின்னர், பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பிரான்மலை:

15—1—55 காலை 10 மணிக்கு இவ்வூர் தி. மு. கழகம், அறிஞர் அண்ணா மன்றம் ஆகியவை சார்பில், கல்யாணி மண்டபத்தில் விழா சிறப்புக் கூட்டம். தோழர் பகலவன் தலைமையில் நடைபெற்றது. அன்று மாலை 5 மணிக்கு, கழகத் தோழர்கள் மேற்படி மண்டபத்திலிருந்து ஊர்வலமாகச் சென்றனர்; காந்தி மைதானத்தில் தோழர் ஞா. தியாகஅரசு கழகக் கொடியை உயர்த்தினார். பின்னர் நடைபெற்ற விளையாட்டு போட்டிகள் முடிந்ததும் வந்திருந்தோருக்குத் தின்பண்டங்கள் வழங்கப்பட்டன.

இராதாபுரம்

15-1-55ல், திராவிடர் திருநாளை முன்னிட்டு, மறுமலர்ச்சி நாடக மன்றத்தாரின் 'ஒரு நாள் இன்பம்' என்ற நாடகம், தோழர் ஏ. முத்தையா தலைமையில் நடைபெற்றது.

உதகை

14-1-55 காலை 11-மணிக்கு அண்ணா முரசொலி மன்ற ஆண்டு விழாவும், திராவிடர் திருநாளும் தோழர் பே. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் தி. ஜெயராமன், ப. மு. குமார், எஸ். பி. மாணிக்கம், த. நஞ்சுண்டன், சுந்தரராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். மன்ற இரவுப் பள்ளி மாணவிகளின் 'நல்ல பெண்மணி' நாட்டியம் நடைபெற்றது. மாணவ, மாணவிகளுக்குப் பரிசும், இனிப்பும் வழங்கப்பட்டபின், பொதுமக்களுக்கு பொங்கலும் தேநீரும் வழங்கப்பட்டது.

கீழப்பழவூர்

27-1-55 மாலை 6-மணிக்கு தோழர் கு. தங்கவேலு தலைமையில் விழா நடைபெற்றது. அதுபோது, தோழர்கள் பாண்டியன், அரங்கராசன், ம. இராசு ஆகியோர் பேசியபின், தோழர் சி. பி. சித்ரரசு அவர்கள், திராவிடர் திருநாள் விழாவின் சிறப்பு குறித்தும், திராவிட நாடு பிரிய வேண்டியதின் அவசியத்தை விளக்கியும் சொற்பொழிவாற்றினார்.

செய்திச் சுருள்

பழனி இளைஞர் தி. மு. க.

14—1—55ல், தோழர் பி. பெருமாள் தலைமையில் நடைபெற்ற செயற்குழு உறுப்பினர் கூட்டத்தில், பிப்ரவரி திங்கள் 27-ந் தேதியன்று கழக முதல் ஆண்டுவிழா நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.

திருமணம்

9—1—55 காலை $8\frac{1}{2}$ மணிக்கு, சரஸ்பூர்—ஆமதாபாத் பம்பாய் அவுசிங் காலனியில் உள்ள தோழர் ந. கண்ணன் இல்லத்தில், தோழர் இரா. சு. கனகமணி தலைமையில் தோழர் சு. வேதாசலம்—தோழியர் ந. வள்ளியம்மை மறுமணம் நடைபெற்றது. தோழர்கள் வீ. இராமசாமி, புதுவை வைத்தியநாதன் ஆகியோர் 'மறுமணம்' என்பது குறித்துச்சொற்பொழிவாற்றினர். இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி — பொறுப்பாளர்.

அனுதாபம்

சித்தூர் தோழியர் பூங்கோதை அவர்களது சகோதரர் எஜ்ஜய்யா அவர்களது மகன் தோழர் கௌதமன் 23—1—55 காலை 4 மணியளவில் இயற்கை எய்தினார். நமது அனுதாபம் உரித்தாகுக. (ஆ-ர்.)

* * *

7—1—55ல், மணக்கால் மலட்டாற்றங்கரையில், தோழர் கணேசன் தலைமையில், தோழர் மு. பகவதி அவர்களின் அன்னையார் இயற்கையெய்தியமை முன்னிட்டு புரோகிதச் சடங்கற்ற முறையில் நீத்தார் கடன் நடைபெற்றது. தோழர்கள் சுப்பிரமணியனார், மு. பகவதி ஆகியோர் 'மூடநம்பிக்கையும் சடங்கும்' என்பது குறித்துப் பேசியபின், அம்மையார் மறைவுக்கு கழகச் சார்பில் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

* * *

காலஞ்சென்ற பண்டிதை நாராயணி அம்மையார் அவர்களின் கணவர் அப்பாதுரை 8—1—55 மாலை 7 மணிக்கு உயிர் நீத்தமை குறித்து சென்னை தாய்மார் கழகச் சார்பில் தோழர் மயிலை சிவமுத்து தலைமையில் ஓர் இரங்கல் கூட்டம் நிகழ்ந்தது. தோழியர்கள் வ. பா. தாமரைக்கண்ணியார், பார்வதி அம்மையார் ஆகியோர் அவர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துப் பேசினர்.

* * *

உடுமலை தி. மு. கழகத் தோழர் ஏ. கிருட்டிணசாமி துணைவியார் 13-1-55ல் இயற்கையெய்தியமை குறித்து புதுமை மன்றத்தின் சார்பில் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

* * *

கடையநல்லூர் தி. மு. கழக பொதுக்குழு உறுப்பினர் தோழர் ப. புகழேந்தி அவர்களது மாமனார் திரு. பெ. சாமி 13—1—55ல் இயற்கையெய்தினார். நமது அனுதாபம் உரித்தாகுக. (ஆ-ர்.)

* * *

தில்லை, தி. மு. கழகத் தோழர் ஆ. திருவேங்கடத்தின் தாயார் 16—1—55 காலையில் இயற்கை எய்தியமை குறித்து கழகச் சார்பில் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

* * *

வீரக்கவுண்டனூர் தி. மு. கழகத் தோழர் நாராயணன் தந்தை இயற்கையெய்தியமை குறித்து கழகச் சார்பில் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

நெய்வேலி இன்பபுரியாக!

பிரிட்டிஷ் நிபுணர்களின் நால்வகைத் திட்டம்!

மத்திய சர்க்கார் பரிசீலிக்கிறது

புதுடில்லி, ஜன. 30—

சென்னை மாகாணத்தில் தென் ஆற்காடு ஜில்லா நெய்வேலியில் காணப்படும் பழுப்பு நிலக்கரிப் படிகங்களை பயன்படுத்துவதற்காக, தொழில் நுட்ப ஆலோசகர்களான 'பவல் டப்ரின் டெக்னிகல் சர்விசஸ் லிமிடெட்' என்ற பிரிட்டிஷ் கம்பெனியின் எஞ்சினீயர்கள், இந்திய சர்க்காருக்கு நான்கு மாற்றுத் திட்டங்களைச் சிபாரிசு செய்திருக்கின்றனர்.

முதல் திட்டத்தின் குறிக்கோள் மின்சார உற்பத்திக்காக எரி பொருளாக உபயோகப்படுத்துவதற்குப் பழுப்பு நிலக்கரியைத் தோண்டி எடுப்பதாகும்.

இரண்டாவது திட்டம் மின்சார உற்பத்திக்கும், அம்மோனியம் சல்பேட் உற்பத்திக்கும் வழிசெய்வதாக இருக்கிறது.

மூன்றாவது திட்டப்படி, மின்சார உற்பத்தி, உரங்கள் உற்பத்தி செய்வதுடன்கூட, வீடுகளிலும், தொழிற்சாலைகளிலும் எரிபொருளாகப் பயன்படுத்துவதற்காகப் பழுப்பு நிலக்கரித் தூள் உற்பத்தியும் செய்யப்பட வேண்டும் என்று சிபாரிசு செய்கிறது.

நான்காவது திட்டப்படி மின்சார சக்தி, உரங்கள், பழுப்பு நிலக்கரித்தூள் உற்பத்தி ஆகியவைகளுடன் செயற்கை எண்ணெய் உற்பத்திசாலை ஒன்று ஏற்படுத்தவும் வழி செய்கிறது.

இத்திட்டங்கள் எல்லாவற்றிலும், மூன்றாவது திட்டம்தான் பொருளாதார ரீதியில் மிகவும் தகுந்ததும், கைக்கொள்ளக் கூடியதுமாக இருக்கிறதென்று பொதுவாகக் கருதப்படுகிறது. ஆலோசகர்களின் குறிப்பு இப்பொழுது இந்திய சர்க்காரின் பரிசீலனையிலிருந்து வருகிறது; தென் ஆற்காடு பழுப்பு நிலக்கரியைத் தோண்டி எடுத்து பயன்படுத்துவதற்காகச் சமீபத்தில் திட்ட ஒழுங்குபாட்டுக் கமிட்டி யொன்றை நியமித்தது ஞாபகமிருக்கலாம்.

எஞ்சினீயரிங் ஆலோசகர்களின் சேவை கொழும்பு திட்டப்படி கிடைத்ததாகும். இவ்வாலோசகர்கள் தங்கள் வேலையை 1954-ம் ஆண்டு மே மாதத்திலேயே தொடங்கினர்; இவர்கள் தங்கள் குறிப்பை இந்திய சர்க்காருக்குச் சென்ற ஆண்டு நவம்பர் மாதத்தில் சமர்ப்பித்தனர்.

100 சதுரமைல் பரப்பில் பழுப்பு நிலக்கரிப் படிகங்கள் இருக்கின்றனவென்று பரிசீலனை மூலம் தெரியவருகிறது. மொத்தம் 20 கோடி டன் பழுப்பு நிலக்கரியைச் சுரங்க மூலம் எடுக்கக் கூடும் என்று எஞ்னீயரிங் ஆலோசகர்கள் அறிவித்துள்ளனர். பழுப்பு நிலக்கரிப் பிரதேசங்கள் கடலூர்—விருத்தாசலம் ரஸ்தா, ரயில் பகுதியில் இருக்கின்றன.

நெய்வேலி நிலக்கரியின் தரம் பற்றிக் கூறுகையில், வெட்டியெடுக்கப்பட்ட பழுப்பு நிலக்கரியில் 56 சதவிகிதம் நீர்ப்பதமும், 2.5 சதவிகிதம் சாம்பலும், 22.4 சதவிகிதம் எளிதில் ஆவியாகக் கூடிய பொருள் இருக்கிறதென்றும் அறிக்கை சொல்லுகிறது. தண்ணீர் சத்து அதிகமாக இருப்பதால் நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்துக்குச் சமீபத்திலேயே உபயோகப்படுத்தப்பட வேண்டும் அல்லது பதப்படுத்திவிடப்பட வேண்டும் என அறிக்கை தெரிவிக்கிறது.

முதலாவது திட்டப்படி 2,00,000 கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய ஒரு மின்சார உற்பத்தி நிலையத்துக்கு எரிபொருளாக வருடத்துக்கு 10,70,000 டன் பழுப்பு நிலக்கரி உற்பத்தி செய்ய வழி செய்யப்படும். இதற்கு 29·15 கோடி ரூபாய் மூலதனச் செலவாகும்.

2 (அ) என்று அறிக்கையில் காணப்படும் திட்டப்படி 2,00,000 கிலோவாட் உற்பத்தி செய்யக் கூடிய மின்சார எரிபொருளாக 13,70,000 டன் பழுப்பு நிலக்கரி உற்பத்தி செய்ய வழி செய்யப்படுவதுடன், வருடத்துக்கு ஒரு லட்சம் டன் அம்மோனியம் சல்பேட் உற்பத்தி செய்யக்கூடிய உர உற்பத்தி தொழிற்சாலையும் நிறுவப்படும். 2 (ஆ) என்ற திட்டம் 2 (அ) திட்டத்துக்குச் சிறிது மாறுபட்டுள்ளதுதான்; இதன்படி 2,00,000 கிலோவாட் மின்சார உற்பத்தி நிலயத்துக்கும், வருடத்துக்கு இரண்டு லட்சம் டன் அம்மோனியம் சல்பேட் உற்பத்திக்குமாக ஆண்டுக்கு 16,30,000 டன் பழுப்பு நிலக்கரி உற்பத்தி செய்யப்படும். இத்திட்டத்துக்கு ரூபாய் 44·29 கோடி செலவாகும். 2 (இ) என்றழைக்கப்படும் அடுத்த திட்டமும் 2 (அ)வுக்குச் சிறிது மாறுபட்டதுதான்; இத்திட்டப்படி 2,00,000 கிலோவாட் மின்சார உற்பத்தி நிலையத்துக்கும், ஒரு லட்சம் டன் அம்மோனியம் சல்பேட் உற்பத்தி செய்யும் உர உற்பத்தித் தொழிற்சாலைக்கும் 20,000 டன் சிறுநீர் உப்பு உற்பத்திக்காகவும் உபயோகப்படுத்த வருடத்துக்கு 14,60,000 டன் பழுப்பு நிலக்கரி உற்பத்தி செய்யப்படும். இத்திட்டத்துக்கு 44·42 கோடி ரூபாய் செலவாகுமென மதிப்பிடப்பட்டிருக்கிறது.

சல்பேட் உரம்

மூன்றாவது திட்டப்படி, 2,11,000 கிலோவாட் மின்சார உற்பத்திக்காகவும், வருடத்துக்கு இரண்டு லட்சம் டன் அம்மோனியம் சல்பேட் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையின் சப்ளைக்காகவும், வருடத்துக்கு 7,14,000 டன் பழுப்பு நிலக்கரித்தூள் உற்பத்திச் சாலையின் உபயோகத்துக்காகவும், வருடத்துக்கு 32,73,00 டன் பழுப்பு நிலக்கரி உற்பத்தி செய்யப்படும். இதற்கு ரூபாய் 58.30 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. பழுப்பு நிலக்கரித் தூளிலிருந்து 3,80,000 டன் கரித்தூளும், 43,000 டன் கரிப்பொடியும், 6,400 டன் மோட்டார் ஸ்பிரிட்டும், 51,300 டன் தாரும், 1,032 டன் பினைலும் உற்பத்தி செய்யப்படும்.

சிறுநீர் உப்பு

கடைசியான நான்காவது திட்டப்படி வருடத்துக்கு 62,68,000 டன் பழுப்பு நிலக்கரி வெட்டி எடுக்கப்படும். இதன் மூலம் வருடத்துக்கு 2,63,000 கிலோவாட் மின்சார சக்தி, ஒரு லட்சம் டன் அம்மோனியம் சல்பேட் 20,000 டன் சிறுநீர் உப்பு ஆகியவை உற்பத்தி செய்யப்படும். 14,28,000 டன் உலர்ந்த பழுப்பு நிலக்கரித் தூளும் உற்பத்தி செய்யப்படும்; இதில் பாதி விற்பனை செய்யப்படும். மறுபாதியிலிருந்து 3,80,000 டன் கரித்தூள், 43,000 டன் கரிப்பொடி, 5,400 டன் மோட்டார் ஸ்பிரிட், 51,300 டன் தார், 1,032 டன் பினைல் ஆகியவை உற்பத்தி செய்யப்படும். வருடத்துக்கு 85,000 டன் மோட்டார் ஸ்பிரிட், 15,000 டன் டீசல் ஆயில், 12,000 டன் தார், 7,300 டன் சல்பூரிக் ஆசிட் உற்பத்தி செய்யக் கூடிய செயற்கை எண்ணெய் உற்பத்திசாலை ஒன்றும் நிறுவப்படும். இதற்கு ரூ. 85.40 கோடி செலவாகும்.

மூலதனச் செலவுக்கு ஏற்றபடி வருமானம் முதல் திட்ட சம்பந்தத்தில், 4.76 சதவிகிதமிருக்குமென்றும், மூன்றாவது திட்டத்தில் 15.12 சதவிகிதம் இருக்குமென்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது; மற்றத் திட்டங்களின் வருமான சதவிகிதம் வேறுபடுகிறது.

கழகக் கூட்டம்

★

எலையமுத்தூர்

தி. மு. கழக ஆண்டு விழா

2—2—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: உடுமலையான்

பேசுபவர்:

ஈ. வெ. கி. சம்பத்

சட்டக் கல்லூரியில் பெரியார் ஈ. வெ. ரா.

சென்னை, ஜன. 31—

நேற்று மாலை சென்னை சட்டக் கல்லூரியில் நடைபெற்ற தமிழ் மன்ற கலைவிழாவில் கலந்துகொண்டு பெரியார் ஈ. வெ. இராமசாமி சொற்பொழிவாற்றினர்.

"நாட்டிலே உள்ள சட்டங்கள் மக்களின் நன்மைக்காகவும், சமுதாயத்தின் நன்மைக்காகவும் இருக்கவேண்டுமேயன்றி, வழக்கறிஞர்களின் வருமானத்திற்காக சட்டங்கள் தெளிவற்றும், வழக்குகளை தாமதிக்கும் தன்மை உடையதாகவும் இருப்பது கூடாது"

என்று, பெரியார் அவர்கள் குறிப்பிட்டார்.

சட்டக் கல்லூரியில் இரா. நெடுஞ்செழியன்

சென்னை, ஜன. 30—

நேற்று மாலை சென்னை சட்டக் கல்லூரியில் நடைபெற்ற தமிழ் மன்ற கலைவிழாவில் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர்.

நாட்டிலே புதுமைக் கருத்துக்கள் பரவ வேண்டியதன் அவசியம் பற்றி அவர் எடுத்துரைத்தார்.

அன்றைய விழாவில் நடிப்புப் புலவர் கே. ஆர். இராமசாமி, தோழர் எ. எஸ். எ. சாமி ஆகியோர் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினர்.

மந்திரி - மல்யுத்த வீரராகிறார்!

பத்திரிகை ஆசிரியரை சவாலுக்கு அழைத்தாராம்!

பிரெஞ்சு அயல்நாட்டமைச்சர், பாரிஸ் செய்தி இதழ் ஒன்றின் ஆசிரியரான ஜூலின் ஸ்க்ரீபர் என்பவரை தன்னுடன் மல்யுத்தத்திற்கு வரும்படி சவால் விட்டிருக்கிறாராம். இந்தச் சவாலை மேற்படி பத்திரிகை ஆசிரியரும் ஏற்றுக்கொண்டு, தாமும் தயாராக இருப்பதாகக் கூறியிருக்கிறாராம்.

ரேஸ் குதிரைகளுக்கு வரி விதிப்பு பற்றி அந்த இதழில் வெளியிடப்பட்ட ஒரு கட்டுரை, தமது கௌரவத்தைப் பாதிப்பதாக அமைச்சர் தெரிவித்திருக்கிறாராம்.

ஆதிவாசிகள் சபதம்!

குராத்தைச் சேர்ந்த கிராமம் ஒன்றில் வாழ்ந்துவரும் சுமார் 3,000 ஆதிவாசிகள், அறவே மதுவை ஒழித்துவிடுவதாகவும், திருமண நிகழ்ச்சிகளில் ரூ. 50க்கு மேல் செலவிடுவதில்லை என்றும் சபதம் செய்துள்ளனராம்.

புயல் வீசினால்தான் கலம் கவிழுமாம்

தெளிவில்லா மீகானின் போலி வீராப்பு!

திருவனந்தபுரம், ஜன, 30—

திரு-கோச்சி பட்டம் தாணு மந்திரி சபைக்கு எதிராக வாக்கு கிடைக்கும் வரையில் பட்டம் தாணு சர்க்காரே பதவியில் நீடித்திருக்க வேண்டுமென்றும், முக்கியமான ஏதாவது ஒரு கோள்கைப் பிரச்சினையில் மந்திரிசபை தோற்கடிக்கப்பட்டால், அது உடனே இராஜினாமாச் செய்துவிட்டு, மறு தேர்தல் நடத்த வேண்டுமென்று இராஜப்பிரமுகருக்கு ஆலோசனை கூற வேண்டுமெனவும் மாநில பி. சோ. கட்சியின் நிர்வாகக் குழுக் கூட்டம் முடிவு தெரிவித்திருக்கிறது.

"பி. சோ. கட்சி பதவியில் இருக்கிற வரையிலும், அது, தனது தேர்தல் பிரகடனத்தில் உள்ள திட்டத்தை நிறைவேற்றப் பாடுபடும்; எந்த ஒரு கட்சியையும் திருப்திப்படுத்துவதற்காக அது தனது கொள்கையில் மாறுபடாது"

என்று மாநில பி. சோ. கட்சியின் செயலாளர் பி. சி. வர்கீஸ் கூறினார்.

மேலும் அவர், "வயலார்—புன்னப்புரா கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்பட்ட நிகழ்ச்சி, தற்செயலாக நடைபெற்ற ஒன்றே ஆகும்; அது, எந்தக் கட்சியையுமே திருப்திப்படுத்துவதற்கென எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கையே அல்ல" என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

☆

பட்டம் பதவி நீடிக்கிறது

கம்யூனிஸ்டுகளின் 'இரட்டை நிலை'

திரு—கொச்சி அமைச்சரவை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்ததற்கிணங்க, 29-ந் தேதியன்று நடைபெற்ற சட்ட சபைக் கூட்டத்தில், மேற்படி தீர்மானம் கொண்டு வரப்படவில்லை.

மேற்படி தீர்மானத்தைக் கொண்டு வர, தி. த. நா. கா. தலைவர் சிதம்பர நாத நாடார் அவர்களுக்கு ஏற்கனவே அனுமதி அளிக்கப்பட்டிருந்தது.

ஆனால் அவர், சபைக் கூட்டத்தின்போது, அத்தீர்மானத்தைக் கொண்டு வர மறுத்துவிட்டிருக்கிறார். தற்போது சிறைவைக்கப்பட்டிருக்கும் தி. த. நா. கா.-வைச் சேர்ந்த 7 எம். எல். ஏ.-க்களையும் ஜாமீனில் விடுவித்து, சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ள வசதி அளிக்கும்பொருட்டு விவாதத்தை பிப்ரவரி 5-ந் தேதிக்கு ஒத்திப் போடும்படி கோரிக் கொண்டதற்கு சபை இணக்கம் தெரிவிக்காததால், இந்தச் சந்தர்ப்பத்தில் மேற்படி பிரரேபணையைத் தாம் கொண்டுவரப் போவதில்லை என்று கூறி மறுத்துவிட்டிருக்கிறார்.

உடனே, சபைத் தலைவர், பிரரேபணை விவாதத்திற்குக்கொண்டு வரப்படாததால், அது 'வாபஸ்' பெறப்பட்டுவிட்டதாகக் கருதப்படுகிறது என்று கூறியிருக்கிறார்.

"காங்கிரஸ் கட்சி மீண்டும் பதவிக்கு வரக் கூடாதென்று தடுப்பதற்காக பி.-சோ. கட்சி சர்க்காரை ஆதரிக்கவோ, அல்லது காங்கிரஸ் கட்சி பதவிக்கு வரவேண்டுமென்பதற்காக பி. சோ. கட்சியை எதிர்க்கவோ முன்வராது," என்று திரு-கொச்சி கம்யூனிஸ்டு கட்சி தனது கருத்தைத் தெரிவித்துள்ளது.

☆

நிலச் சீர்திருத்த மசோதாக்கள்

சகல கட்சிகளும் ஆதரிக்கின்றனவாம்

திரு-கோச்சி சட்ட சபையில் நிகழ்ச்சி

திருவனந்தபுரம், ஜன. 31—

நிலச் சீர்திருத்தம் சம்பந்தமாக திரு-கொச்சி பி.-சோ. கட்சி சர்க்கார் கொண்டுவந்துள்ள 7 மசோதாக்களையும், சபையிலுள்ள எல்லா கட்சி உறுப்பினர்களும் கட்சி வேற்றுமை கருதாது ஒருமனதாக ஆதரித்துள்ளனராம்.

பயிரிடுவோருக்கு நிவாரணம் அளிப்பதற்கான ஒரே நோக்கத்துடன் கொண்டுவரப்பட்ட இம் மசோதாக்கள், பொறுக்குக் குழுவின்முன்புசமர்ப்பிக்கப்படுமென்று தெரியவருகிறது.

இம்மசோதா மீது பொதுவான விவாதங்கள் நடைபெற்றபோது, பொறுக்குக் குழுவினர் கூறும் யோசனையுடன் தகுந்த திருத்தங்களுடன், இம்மசோதாக்களை நிறைவேற்ற வேண்டியது அவசியமாகிறது என்று அவர்கள் வற்புறுத்திப் பேசி இருக்கின்றனர்.

கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்களும், மற்றும் சிலரும் கொண்டுவர இருந்த சில அவசரப் பிரரேபணைகளை சபாநாயகர் நிராகரித்துவிட்டிருக்கிறார். அவசரப் பிரரேபணைகள் சம்பந்தப்பட்ட விஷயங்கள் எல்லாம் ஏற்கனவே சர்க்காரால் கவனிக்கப்பட்டு வருகின்ற காரணத்தால், அதற்கான தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அமைச்சர் உறுதிமொழி கூறியதின் பேரிலேயே அந்த அவசரப் பிரரேபணைகள் யாவும் நிராகரிக்கப்பட்டுவிட்டனவாம்.

போலீஸ் அக்கிரமங்கள், சட்ட சபை விவாதத்திற்கு நிலச் சீர்திருத்த மசோதாக்களைக் கொண்டு வந்த பின்னருங்கூட, ஏராளமான பயிரிடுவோரும், குத்தகையாளர்களும் வெளியேற்றப்பட்ட விஷயங்கள் பற்றியுமே அந்த அவசரப் பிரரேபணைகள் காணப்படுகின்றன.

வியட்நாம் தேசிய ஐக்கிய முன்னணி

டாக்டர் ஹோசிமின் தலைவராகிறார்

வியட்நாம் தேசிய ஐக்கிய முன்னணி தனது சமீபத்திய கூட்டமொன்றில் டாக்டர் ஹோசிமின்னை, முன்னணியின் கௌரவத் தலைவராகத் தேர்ந்தெடுத்திருப்பது மட்டுமின்றி, அவரது சர்க்காரின் கொள்கைகளை ஏற்றுக்கொள்வதென்றும் முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

கடந்த 1951 மார்ச் மாதத்தில் வியட்மின் லீக் லியன் வியட் முன்னணி என்ற இரண்டும் ஒன்று சேர்ந்து உருவான இந்த வியட்நாம் தேசிய ஐக்கிய முன்னணி இன்றுள்ள நிலைமைகளை ஆராய்ந்த பிறகு, முன்னணியை நாடெங்கும் விரிவாக்குவதென்றும், சமாதானத்தை நிலை நாட்டவும் வியட்நாம் முழுவதும் ஜனநாயகம் நிலவவும் போராடவேண்டும் என்றும் முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

இன்றுள்ள புதிய சூழ்நிலைக்கொப்ப புதிய கட்சிச் சட்டத்தினை உருவாக்கவும், அரசியல் லட்சியத்தை வரையறுக்கவும், ஒரு விரிவான தேசிய மாநாடு கூட்டுவதென்றும், முன்னணி முடிவு செய்துள்ளதாம் இதற்காக, ஆரம்ப வேலைகளைக் கவனிக்க ஒரு குழுவும் நியமிக்கப்படுமாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.,